# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT

# 2016

ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය

**கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

**Department of Project Management and Monitoring**
**Ministry of National Policies and Economic Affairs**

# உள்ளடக்கம்

**பக்க இல.**


01. அறிமுகம்.....................................................................................................01

02. தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகள் ...................... 02-03

03. நிறுவன கட்டமைப்பு ..........................................................................................03-04

3.1 திணைக்களத்தின் ஆளணி விபரம்

3.2 வரவு செலவுத்திட்ட தகவல்கள்

04. திணைக்களத்தின் பணிகள்........................................................................... 05-09

4.1 கண்காணிப்பு முறைமை

4.1.1 முன்னேற்ற அறிக்கைகள் ஊடாக கண்காணிப்பு

4.1.2 கள விஜயங்கள் ஊடாக கண்காணிப்பு

4.1.3 முக்கிய கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல

05. விசேட செயற்பாடுகள் ............................................................................... 09-12

06. அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் ஆளணி விருத்தி செய்தல்......................12

இணைப்பு I - நிறுவன கட்டமைப்பு

இணைப்பு II - வரவு செலவுத்திட்ட தகவல்கள்

இணைப்பு III - நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரிப்பதில் வசதிப்படுத்தல் சேவைகளின் முன்னேற்றம்

இணைப்பு IV - கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இணைப்பு V - பன்முகப்படுத்தப்பட்ட மூலதன பதீட்டு நிகழ்ச்சித்திட்டம்

## அட்டவணைகளின் விபரங்கள்

**பக்க இல.**

அட்டவணை இல. 01: ஆளணி விபரம் .......................................................................... 04

அட்டவணை இல. 02: வரவு செலவுத்திட்ட தகவல்கள் ............................................................ 04

அட்டவணை இல. 03: மொத்த மதிப்பீட்டுத்தொகைக்கிணங்க கருத்திட்டங்களின் வகைகள் (ரூபா.மி).......................................................................05

அட்டவணை இல. 04: கள விஜயங்கள் ஊடாக கண்காணிப்பு........................................07

அட்டவணை இல. 05: 2016 ஆம் ஆண்டில் இடம் பெற்ற விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் ............................................................................................ 09

அட்டவணை இல. 06: துறை ரீதியாக தீர்மானங்களின் அமுலாக்க முன்னேற்றம் ................... 10

அட்டவணை இல. 07: உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி - 2016................................12

# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை
# 2016

## 01. அறிமுகம்

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் முதன்மை பொறுப்பு அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை விரைவாகவும் மற்றும் வினைத்திறனாகவும் அமுல்படுத்துவதனை உறுதி செய்ய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றை கண்காணித்தலும் மற்றும் மதிப்பீடு செய்தலும் ஆகும்.

2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆட்சிப் பெறுப்பை ஏற்ற புதிய அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு அமைய நாட்டின் நிலையான பொருளாதார விருத்தியுடன் பிரதேசங்களின் சமாந்திரமான அபிவிருத்தியையும் பெற்றுக் கொள்வது ஒட்டு மொத்த அபிவிருத்தியின் இலக்காக காணப்பட்டது. இந்த தேசிய குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக இத்திணைக்களமானது பொருளாதார முகாமைத்துவ அலுவலக குழு, பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழு மற்றும் இறுதியாக அமைச்சரவையில் எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானங்களை நடைமுறைபடுத்துவதை கண்காணிப்பது என்பன இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்பாக காட்டப்பட்டது. இதற்கமைய கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைபடுத்துவது பற்றிய அறிக்கைகள் (வார, மாத, மற்றும் காலாண்டு) ஒழுங்காக ரீதியில் அறிக்கையிடப்பட்டன. இத்திணைக்களத்தினால் மேற்கூறப்பட்ட குழுக்களினாலும் அமைச்சரவையினாலும் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைபடுத்துவது பற்றி பிரதமர் அலுவலகத்திற்கு வழமையாக வழங்கப்பட்ட அறிக்கை ஒவ்வொரு கொள்கை தீர்மானங்களினதும் எடுக்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதை அளவீடு செய்வதற்று பேருதவியாக இருந்தது.

மேலும், இத்திணைக்களமானது நிரல் அமைச்சுக்களின் (Line Ministries) கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றை கண்காணிப்பதற்கு கூடுதலான வழங்களை ஒதுக்கியுள்ளது. இந்த கண்காணிப்பானது மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற மீளாய்வு செயற்பாடுகள், கள விஜயங்கள், பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கூட்டங்கள், பல்வேறு உயர்மட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் (துறைசார் ரீதியாக மற்றும் நிதி வழங்குனர் ரீதியாக மீளாய்வுகள்) மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இத்திணைக்களத்தின் கண்காணிப்பானது சுமுகமான மற்றும் உரிய நேரத்திலான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் அமுலாக்கத்தை வசதிப்படுத்துகின்றது. பிராந்திய அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இத்திணைக்களமானது மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றங்களை வாராந்த மற்றும் மாதாந்த ரீதியில் மீளாய்வு செய்கின்றது. இந்த செயற்பாடானது சுமுகமான உரிய நேரத்தில் நிதியினை சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்குவதை வசதிப்படுத்துவதன் ஊடாக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களை குறித்த வருடத்திற்குள் பூர்த்தியாக்குவதற்கு வசதி செய்கின்றது.

இக்குறிக்கோளை அடைவதற்காக நிதி மற்றும் நிர்வாக துறை உள்ளடங்களாக கண்காணிப்பை வசதிப்படுத்த இத்திணைக்களமானது 9 துறைகளாக அபிவிருத்தி தொனிப்பொருளின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு திணைக்களத்தின் செயற்பாடுகள இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 02. தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் தொலை நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை வரையறுக்கும் போது அரசின் அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வினைத்திறனாக அடைந்து கொள்வதற்காக திணைக்களத்தின் பணிகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பன முதன்மையாகக் கொண்டு அலுவலக உத்தியோகத்தர்களுக்கிடையில் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

### தொலைநோக்கு

''உற்பத்தித்திறன் மிக்க அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக முதன்மை பங்காளராதல்''

### செயற்பணி

''பெறுபேறுகளை உறுதி செய்யும் பொருட்டு அரசின் அனைத்து அபிவிருத்தி கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கண்காணித்தலும் அத்துடன் மதிப்பீட்டு கேந்திர நிலையமாகவும் செயற்படுதல்''

### இலக்குகள் / நோக்கங்கள்

i அரசின் கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தல் பற்றிய முன்னேற்றத்தை கண்காணித்தலும் மீளாய்வு செய்தலும்.

ii வெளிநாட்டு நிதியுதவியுடனான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் அமுலாக்க நடவடிக்கைகளை கண்காணித்தல் அத்துடன் அந்த அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அமுல்படுத்தலின் முன்னேற்றத்தை அரையாண்டு அற்க்கையாக வெளியிடுதல். அக்கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை துரிதபடுத்துவதற்கு உதவவும் குறித்த நிதியை பயன்படுத்துவதில் உள்ள குறைபாடுகளை இல்லாமல் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

iii அரச முதலீட்டுத்திட்டல் குறிப்பிட்டுள்ள மிகவும் முக்கியமான கருத்திட்டங்களை கண்காணிப்பிற்கு உட்படுத்தல் மற்றும் குறித்த கருத்திட்டங்கள் உரிய கால எல்லையினுள் முறையாக அமுல்படுத்தப்படுவதுடன் ஊடாக பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை அதிகரிக்க தேவையான வழிகாட்டலை வழங்குதல்.

iv வெளிநாட்டு உதவியுடனான கருத்திட்டங்களின் பணிகளை ஆராய்வதற்கு நிதி வழங்கியவர்களுடன் இணைந்து கூட்டாக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்தலும் அந்த தீர்மானங்கள் தொடர்பில் குறித்த தரப்புகளுக்கு அறிவித்தலும்.

v. பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுவின் தீர்மானங்களை அமுல்படுத்தலின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் அறிக்கையிடலும் (CCEM).

vi. நிரல் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் அரசின் தொழில் முயற்சிகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட சட்டகத்தை தயாரிப்பதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் தேவையான வசதிகளை வழங்குதல்.

vii. தெரிவு செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பிடலும் அதனூடாக எதிர்கால கருத்திட்டங்களின் திட்டங்களை தயாரித்தலும் வழிகாட்டல்களை வழங்குதலும்.

viii திணைக்களத்திளால் கண்காணிக்கப்படும் கருத்திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை வலுப்படுத்தல்.

## 03. நிறுவன கட்டமைப்பு

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நான்கு மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் ஆகியோரின் நேரடித் கண்காணிப்பின் கீழ் 09 முக்கிய குழுக்களையும் 02 பிரிவுகளையும் கொண்டு இயங்கி வருகிறது. அப் பிரிவுகளாவன: -

**திணைக்களத்தின் துறைகள்**

i. மனித வளங்கள்
ii. சமூக மற்றும் சமயங்கள்
iii. விவசாயம்
iv. பிராந்திய அபிவிருத்தி
v. பொது பயன்பாடு
vi. போக்குவரத்து
vii. நல்லாட்சி
viii. சுற்றாடல்
ix. கைத்தொழில் மற்றும் நிதி

**திணைக்களத்தின் பிரிவுகள்**

i. நிருவாகம்
ii. நிதி

மேலே குறிப்பிட்ட பிரிவுகளில் நிதி மற்றும் நிருவாகப் பிரிவு திணைக்கத்தின் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான உதவிச் சேவைகளை வழங்குவதுடன் ஏனைய பிரிவுகள் அனைத்தும் தொழிநுட்ப பிரிவுகளாக நேரடியாக அபிவிருத்தி கருத்திட்டங்களில் கண்காணிப்பு தொடர்பிலான பணிகளில் ஈடுபடுகின்றன. (நிறுவன கட்டமைப்பு - *இணைப்பு I*)

### 3.1 திணைக்களத்தின் ஆளணி விபரம்

திணைக்களத்தின் ஆளணி விபரம் 31. 12. 2016 இல் பின்வருமாறு: -

**அட்டவணை இல. - 01 : ஆளணி விபரம்**

| ஆளணி வகை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுத்தர அலுவலர்கள் | 37 | 30 | 07 |
| இரண்டாம் நிலை அலுவலர்கள் | 01 | 01 | - |
| மூன்றாம் நிலை அலுவலர்கள் | 50 | 27 | 23 |
| ஆரம்ப நிலை அலுவலர்கள் | 20 | 19 | 01 |
| **Total** | **108** | **77** | **31** |

### 3.2 வரவு செலவுத்திட்ட தகவல்கள்

2016 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட செலவுகள் மதிப்பீடு மற்றும் வருடாந்த செலவுகள் வரைபடம் இல. 01 ஊடாக முன்வைக்கப்படுகிறது. வரவுசெலவு தகவல்கள் பற்றிய விபரமான அறிக்கையொன்று *இணைப்பு இல. II* ஊடாக முன் வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. – 02 : வரவு செலவுத் திட்ட தகவல் - 2016**

| மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவு - 2016 (ரூ.மி) | | |
|---|---|---|
| **வகை** | **மதிப்பீடு** | **உண்மைச்செலவு** |
| **மூலதனச் செலவு** | 13.99 | 12.84 |
| **மீண்டெழும் செலவு** | 91.18 | 87.84 |
| **மொத்தம்** | **105.17** | **100.68** |

**வரைபடம் இல. 01: வரவு செலவுத்திட்ட தகவல் – 2016**



## 4.0 திணைக்களத்தின் பணிகள்

அரசாங்கம் நிலையான உயர் பொருளாதார வளர்ச்சியை விருத்தி செய்யும் நோக்குடன் பரந்த அரச குறிக்கோள்களுக்கு அமைய சமூக மற்றும் பிராந்திய பாரபட்சங்களைக் குறைத்து அபிவிருத்தி அணுகுமுறைகளை ஆரம்பத்தில் அமுல்படுத்தியது.

மேற்கூறப்பட்ட இந்த இலக்குகளை அடைவதற்காக அரசாங்கத்தினால் அபிவிருத்தி தொனிப்பொருட்களை ஏற்படுத்தி அவற்றை அடிப்படையாகக் கொண்டு நிரல் அமைச்சுக்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் முக்கிய அபிவிருத்தி கருத்திட்டங்களில் 1356 சிறிய, நடுத்தர மற்றும் பெரிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுபடுத்தப்பட்டது. இவற்றுள் 308 கருத்திட்டங்கள் பாரிய அளவிலான திட்டங்களாகும். அதாவது மொத்த மதிப்பீடு ரூபா 500 மில்லியனுக்கும் மேலானதாக காணப்பட்டது. இந்த கருத்திட்டங்களின் விபரங்கள் மதிப்பீட்டுத் தொகைகளின் அடிப்படையில் அட்டவணை 03 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 03 : மொத்த செலவுக்கு அமைய கருத்திட்டங்களின் வகைகள் (ரூ.மி.)**

| கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| நிதி மூலம் | மொத்த செலவு (ரூ.மி.) | | | | |
| | <50 | 50-500 | 500-3000 | 3000-5000 | >5000 |
| **வெளிநாட்டு** | 502 | 511 | 152 | 26 | 34 |
| **உள்நாட்டு** | 7 | 28 | 24 | 18 | 54 |
| **மொத்தம்** | **509** | **539** | **176** | **44** | **88** |

இதற்கு மேலதிகமாக இத்திணைக்களமானது பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழு (CCEM), பொருளாதார முகாமைத்துவ அலுவலக குழு (OCEM) ஆகியோர்கள் அபிவிருத்தி தொடர்பாக எடுக்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைய கண்காணிப்பு வேலைகளை நடாத்திச் செல்கின்றது. அத்துடன் கருத்திட்டங்களில் காணப்படும் முக்கியமான பிரச்சனைகளை தேசிய செயல் விளக்கக்கூடத்தில் வெளிப்படுத்துகின்றது (NOR).

மேலும், 295 அரச உடமைக் கம்பனிகள் (SOEs) அவர்களுடைய குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நிறுவன பெறுபேறுகளை தர்க்க ரீதியில் அடையாளம் காண்பதற்கு வசதி செய்தல் மற்றும் அடைவுகளை காலாண்டு ரீதியில் கண்காணித்தல் என்பன இத்திணைக்களத்தின் ஒரு செயற்பாடாக 2016 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்றது. இந்நிறுவனங்கள் தங்களுடைய பெறுபேற்று சங்கிலி மற்றும் நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரிப்பதற்கான செயற்பாட்டில் பின் தங்கிய அறிவைக் கொண்டிருப்பதால் இத்திணைக்களம் பல பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியதுடன், ஆலோசனைகள் பயிற்சி

பட்டறைகள் மற்றும் தனிப்பட்ட ரீதியிலான ஆலோசனைகள் மற்றும் இணையத்தள உதவிகளை வழங்கி அரச உடமைக் கம்பனிகள் 2016 – 2018 ஆம் ஆண்டிக்கான நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரிப்பதற்கு உதவிகளை வழங்கியது. இலக்குகளிற்கு எதிராக அடைவுகளை அளவிட கூடியதாக ஒவ்வொரு பெறுபேற்று மட்டத்திற்கும் பெறுபேற்று குறிகாட்டிகள் மூலம் அவற்றை அளவிட முடியும். இதன் பயனாக 2016 ஆம் ஆண்டில் 213 அரச உடமைக் கம்பனிகள் நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்துள்ளதுடன் 157 அரச உடமைக் கம்பனிகள் அடைவுகளை அறிக்கையிட்டுள்ளன. *(இணைப்ப III)*

அரச முதலீட்டுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள வளங்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்ய இந்த அபிவிருத்தி கருத்திட்டம் முறையாகவும் தொடர்ச்சியாகவும் கண்காணிக்கவும் அத்துடன் தேவையான சந்தர்ப்பங்களில் மதிப்பீடுகளை செய்யும் பொறுப்பு முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே 2016 ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் உள்ள பல்வேறு கண்காணிப்பு முறைமைகளை உபயோகித்து இந்த கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் கண்காணிப்பதற்கு திணைக்களத்தினால் முடிந்துள்ளது.

### 4.1 கண்காணிப்பு முறைமை

அபிவிருத்தி கருத்திட்டங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு முறைகளுக்கு இத் திணைக்களமானது முதலாம் தர மற்றும் இரண்டாம் தர தரவுகளை சேகரித்து அதாவது கள விஜயம் செய்து பெற்ற அறிக்கைகள், வினா விடை அவதானிப்புக்கள் ஆகியவற்றை இலத்திரனியல் மென்பொருள் மூலம் ஒன்றிணைத்து மேற்கொள்ளுகின்றது. ஏதாவது வேறுபாடுகள் காணப்பட்டால் தேவையான மாற்று நடவடிக்கைகளை இம்முறையின் கீழ் எடுக்கப்படுகின்றது.

#### 4.1.1 முன்னேற்ற அறிக்கைகள் ஊடாக கண்காணிப்பு

சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுக்கள் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபா 500 மில்லியனுக்கும் மேற்பட்ட கருத்திட்டங்களின் முற்னேற்ற அறிக்கைகளை மாதாந்த ரீதியிலும், ரூபா 500 மில்லியனுக்கும் கீழ்பட்டவற்றை காலாண்டு ரீதியிலும் இத்திகைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் படி வேண்டப்படுகின்றனர்.

#### 4.1.2 கள விஜயங்கள் ஊடாக கண்காணிப்பு

கருத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளை ஆராயும் போது சில கருத்திட்டங்கள் அவற்றின் முக்கிய பிரச்சனைகள் காரணமாக அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இத்திணைக்களத்திற்கு ஏற்படுகின்றது. இதனால் இத்திணைக்களமானது சம்பந்தப்பட்ட கருத்திட்டங்கள் உள்ள இடங்களிற்கு கள

விஜயங்களை மேற்கொள்கின்றது. அந்த வகையில் 2016 ஆம் ஆண்டில் 27 கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை இல 04 : கள விஜயங்கள் ஊடாக கண்காணிப்பு முன்னேற்றம் – 2016**

| பிரிவு | மேற்கொள்ளப்பட்ட களவிஜயங்களின் எண்ணிக்கை | ஏற்புடைய தரப்புகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பிரச்சினைகள் |
|---|---|---|
| கைத்தொழில் நிதி மற்றும் சுற்றாடல் | 01 | 01 |
| விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | 01 | 01 |
| மனிதவள அபிவிருத்தி | 08 | 08 |
| சமூக மற்றும் கலாச்சாரங்கள் | 03 | 03 |
| பிராந்திய அபிவிருத்தி | 01 | 01 |
| போக்குவரத்து | 04 | 04 |
| பொது பயன்பாடுகள் | 06 | 06 |
| நல்லாட்சி | 03 | 03 |
| **மொத்தம்** | **27** | **27** |

### 4.1.3 முக்கிய கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்

2016 ஆம் ஆண்டு பாரிய கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக இத்திணைக்களத்தில் பல்வேறு கூட்டங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அதாவது கருத்திட்ட பணிப்பாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், வெளிநாட்டு உதவிகளை வழங்கும் தரப்பினர், நிரல் அமைச்சு அலுவலர்கள் மற்றும் நிதி அமைச்சின் கீழ் உள்ள திறைசேரி திணைக்கள உத்தியோகத்தர்கள் ஏனைய திணைக்களங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பல இடம்பெற்றன.





**மாத்தறை – பெலியத்த புகையிரத பாதை நீடிப்பு கருத்திட்டம் – கட்டம் I**



கட்டுமான வேலைகள், நவீன மயபடுத்தப்பட்ட தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையம் - ஸ்ரீ ஜெயவர்த்னபுர



கள விஜய அவதானிப்பு – சிறிய மின்சக்தி கருத்திட்டம் - இலுக்பல்லெஸ்ச, பலாங்கொடை




ரசாவி கட்டடம் - தேசிய புற்றுநோய் வைத்தியசாலை - மகரகம




களுவாஞ்சிகுடி வைத்தியசாலை – மட்டக்களப்பு



கட்டடத்தொகுதி பேராசிரியர்களின் பிரிவு கிழக்கு பல்கலைக்கழகம் - மட்டக்களப்பு



கட்டடத்தொகுதி - நிதி மற்றும் முகாமைத்துவ பீடம் - ருகுணு பல்கலைக்கழகம் - மாத்தறை

**அட்டவணை இல. 05 : 2016 ஆம் ஆண்டில் இடம் பெற்ற விசேட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்**

| கூட்டங்கள்/கலந்துரையாடல் வகைகள் | இலக்கம் |
|---|---|
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 33 |
| துறைசார் கூட்டங்கள் | - |
| நிதி வழங்கும் நிறுவனங்களுடன் செய்யப்பட்ட கூட்டங்கள் | 07 |
| செயற்பாட்டு குழு கூட்டங்கள் / கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் | 38 |
| வேறு விசேட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் | 53 |
| அரச உடமைக் கம்பனிகள் கூட்டம் | 30 |
| நிதி வழங்கும் நிறுவனங்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் | 01 |
| **மொத்தம்** | **166** |






வெளிநாட்டு உதவி வழங்கும் தரப்புகளுடன் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்

## 5.0 விசேட செயற்பாடுகள்

❖ **பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுக்களின் கலந்துரையாடல் - செயல் விளக்க கூட கூட்டங்கள்**

கருத்திட்டங்களில் காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக பிரதம மந்திரியின் அலுவலகத்திலுள்ள தேசிய செயல் விளக்க கூடத்தில் 23 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இக் கூட்டங்களில் 123 பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு அவற்றிற்கு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

**அட்டவணை இல. 06 : துறை ரீதியாக தீர்மானங்களின் அமுலாக்க முன்னேற்றம்**

| | துறை | அமுலாக்க முன்னேற்றம் / பிரச்சினைகளின் எண்ணிக்கை / விடயங்கள் (%) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | **76-100** | **51-75** | **26-50** | **0-25 மற்றும் வேறு** | **மொத்தம்** |
| 1 | சுற்றுலா அபிவிருத்தி | 32 | 07 | 27 | 05 | 71 |
| 2 | மின் மற்றும் எரிசக்தி | 15 | 02 | 03 | 07 | 27 |
| 3 | சுகாதாரம் | 03 | 02 | 02 | 02 | 09 |
| 4 | போக்குவரத்து | 05 | 04 | - | 01 | 10 |
| 5 | நீர் | 04 | - | - | - | 04 |
| 6 | விவசாயம் | - | 02 | - | - | 02 |
| | **மொத்தம்** | **59** | **17** | **32** | **15** | **123** |

❖ **தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை வரைதல்**

மேற் கூறியவற்றிற்கு மேலதிகமாக தேசிய மதிப்பீட்டுக்குரிய ஒரு கொள்ளையை (NEP) உருவாக்குகின்ற பொறுப்பும் இத்திணைக்களத்திகு மீது வழங்கப்பட்டுள்ளது. இதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், உதவி வழங்கும் சமூகம் மற்றும் துறை சார்ந்த நிறுவனங்கள் என்பவற்றின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக கருத்தரங்குகளும் பாவனையாளர் ஆலோசனை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இரண்டு கருத்தரங்குகளிலும் பங்கு பற்றிய பெருமளவிலான பாவனையாளர் குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கைகை ஒன்றிணைத்தும் பின்பு 2016ஆம் ஆண்டு நிறைவில் விரிவான தேசிய மதிப்பீட்டு கொள்கை வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

❖ **கருத்திட்ட கணிப்பீடுகளையும் மதிப்பீடுகளையும் பொறுப்பேற்றல்**

கருத்திட்டங்களின் அபிவிருத்தி பற்றி மதிப்பீடு மற்றும் கணிப்பீடு செய்வதில் உள்ள குறைபாடுகளை கருத்தில் கொண்டு 2016 ஆம் ஆண்டில் ஒரு கருத்திட்டம் மதிப்பீட்டுக்காக தெரிவு செய்யப்பட்டது.

அதன்படி சிலாபத்தில் நாரிகொடல்ல எனும் இடத்தில் அமைந்துள்ள வீடமைப்புத்திட்டம் மதிப்பீட்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. மதிப்பீட்டுக்கான நிபந்தனைகள் (TOR) மற்றும் கேள்விக் கொத்து என்பன வரையப்பட்டு பல கலந்துரையாடல்கள் மற்றும் அளவீட்டு நிகழ்வுகள் என்பன வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் உத்தியோகத்தர்கள், நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, சிலாபம் நகரசபை, சிலாபம் பிரதேசபை மற்றும் சிலாபம் பிரதேச செயலகம் என்பவற்றின் பங்கு பற்றுதலுடன் நடாத்தப்பட்டன.

❖ **பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல்**

2016 ஆம் ஆண்டில், அரசாங்கம் பொருளாதாரம், கலாச்சாரம், சமூக மற்றும் சமய அபிவிருத்தி நடவடிக்கைகளை உயர்த்தும் நோக்கில் கிராமங்களில் 2 வகையான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அவையாவன பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் (DCB) மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RIDP) ஆகியனவாகும்.

இந்நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு மாவட்ட செயலகங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட செயல் விளக்க பிரிவின் ஊடாக இந்நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிக்கும் படியும் அத்துடன் ஒவ்வொரு மாவட்ட செயலாளர்களும் தங்களது முன்னேற்றங்களை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு அறிக்கையிடும் படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டமானது 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு வாராந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களுக்கு வினைத்திறனான காசுப்பய்ச்சலை வழங்குவதன் மூலமும் அவர்களின் அறிக்கையினூடாக வெளிப்படுத்தப்படும் பிரச்சனைகளுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் கருத்திட்டங்களின் சுமுகமான அமுலாக்கத்தினை அமைச்சு உறுதி படுத்தக்கூடியதாக இருந்தது.

கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில், 25 மாவட்டங்களிலும் மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூபா 11,545.17 மில்லியன் செலவில் அனுமதி வழங்கப்பட்ட 28,649 கருத்திட்டங்களில் 28,448 கருத்திட்டங்கள் சிறு நீர்ப்பாசனம், சமூகங்களுக்கிடையிலான நீர் வழங்கள், சிறிய அளவிலான மின் விநியோகம், கிராமிய பாதையமைப்பு மற்றும் ஏனைய கிராமிய உட்கட்டமைப்பு ஆகிய துறைகளில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. *(இணைப்ப IV)*

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில், 25 மாவட்டங்களிலும் மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூபா 3,090.86 மில்லியன் செலவில் அனுமதி வழங்கப்பட்ட 23,547 கருத்திட்டங்களில் 23,444 கருத்திட்டங்கள் சிறு நீர்ப்பாசனம், சமூகங்களுக்கிடையிலான நீர் வழங்கள், கிராமிய மின் விநியோகம், சமூக அபிவிருத்தி, சமூக நலன்புரி, சமூக சேவைகள் சமூக பாதுகாப்பு கிராமிய பொருளாதாரம் மற்றும் ஏனைய கிராமிய கட்டமைப்பு ஆகிய துறைகளில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. *(இணைப்ப V)*

❖ **திணைக்கள "செயலாற்றுகை அறிக்கை வெளியிடல் - 2016"**

திணைக்களத்தின் அபிவிருத்தி கருத்திட்டங்களின் செயலாற்றுகை அறிக்கை 2016, வருடத்தின் நடுப்பகுதி மற்றும் முடிவிலும் வெளியிடப்பட்டது. இவ் அறிக்கையில் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படும் தேசிய நிதி மற்றும் வெளிநாட்டு கடன் மற்றும் நன்கொடை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றங்களும் காட்டப்பட்டன.

## 6.0 அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் ஆளணி விருத்தி செய்தல்

திணைக்கள அலுவலர்களின் ஆளணி விருத்தி செய்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் அதனுள் கருத்திட்டம் திட்டமிடல், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டை இலக்காக கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டன. அனைத்து பயிற்சி செயலமர்வுகள் நிறைவடைந்த பின்னர் அந்த பயிற்சியினால் பெறப்பட்ட அறிவை மற்றும் திறனை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு, பயிற்சியைப் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன் அது அவர்களின் முன்வைப்பு திறனை மேம்படுத்துவதற்கும் உதவியது.

2016ஆம் ஆண்டினுள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்கு பற்றிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயலமர்வுகளின் விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

**அட்டவணை இல. 07 : உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி - 2016**

| பயிற்சி நிகழச்சித்திட்டம் | உள்நாடு / வெளிநாடு | பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| குறுங் காலப் பயிற்சிகள் | வெளிநாடு | 29 |
| நீண்ட காலப் பயிற்சிகள் | வெளிநாடு | 02 |
| நீண்ட காலப் பயிற்சிகள் | உள்நாடு | - |
| குறுங் காலப் பயிற்சிகள் | உள்நாடு | 20 |
| **மொத்தம்** | | **51** |

# இணைப்பு I

# கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் - நிறுவன கட்டமைப்பு 31.01.2017 இல்

*இணைப்பு I*




இநிசே - இலங்கை நிர்வாக சேவை, இதிசே - இலங்கை திட்டமிடல் சேவை

அபி – அபிவிருத்தி உத்தியோகத்தர், அஉ – அபிவிருத்தி உதவியாளர்

அசேசே – அலுவலக சேவகர் சேவை, பொமுஉ – பொது முகாமைத்துவ உதவியாளர்

# இணைப்பு II

ශීර්ෂ අංකය
**தலைப்பு இல.**
**Head No** — **280**

දෙපාර්තමේන්තුව
**திணைக்களம்**
**Department** — ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Department of Project Management & Monitoring**

## වියදම් සාරාංශය
## செலவுச் சுருக்கம்
## Summary of Expenditure

| වැඩසටහන<br>நிகழ்ச்சித் திட்டம்<br>Programme | විස්තරය<br>விவரணம்<br>Discription | 2015<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2016<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2016<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2016<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2016<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|---|
| 2 | පුනරාවර්තන වියදම<br>மீண்டுவரும் செலவு<br>Recurrent Expenditure | 78,627,643 | 86,025,000 | 91,188,600 | 87,843,151 | 3,345,449 |
| | මූලධන වියදම<br>மூலதனச் செலவு<br>Capital Expenditure | 13,151,077 | 12,330,000 | 13,995,000 | 12,846,725 | 1,148,275 |
| | **එකතුව/மொத்தம்<br>Total** | **91,778,720** | **98,355,000** | **105,183,600** | **100,689,876** | **4,493,724** |

ශීර්ෂ අංකය/**தலைப்பு இல**/**Head No :280**

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව

**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**

**Ministry/Department : Department of Project Management & Monitoring**

වැඩ සටහන් අංකය/ **நிகழ்ச்சித் திட்டம் /Programme No:02**

ව්‍යාපෘතිය **01-** ව්‍යාපෘති කළමනාකරණය සහ අධීක්ෂණය

**கருத்திட்டம்** : 01 **கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு**

**Project :01 - Project Management & Monitoring**

පුනරාවර්තන වියදම්/ **மீண்டுவரும் செலவு /Recurrent Expenditure**

| විස්තරය<br>விவரணம்<br>Discription | 2015<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2016<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2016<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2016<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2016<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|
| පෞද්ගලික පඩි නඩි<br>ஆளுக்குரிய வேதானாதிகள்<br>Personal Emoluments | 41,685,028 | 47,900,000 | 51,010,000 | 48,054,750 | 2,955,250 |
| වෙනත්<br>ஏனையவை<br>Other | 36,942,615 | 38,125,000 | 40,178,600 | 39,788,401 | 390,199 |
| එකතුව/ மொத்தம்<br>**Total** | **78,627,643** | **86,025,000** | **91,188,600** | **87,843,151** | **3,345,449** |

ශීර්ෂ අංකය/ **தலைப்பு இல** /Head No :280

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Ministry/Department : Department of Project Management & Monitoring**

වැඩ සටහන් අංකය/ **நிகழ்ச்சித் திட்டம்** /**Programme No:02**

මූලධන වියදම්/ **மூலதனச் செலவு** / **Capital Expenditure**

| වැය විෂය අංකය<br>விடய குறியீடு<br>Object Code | මූලධන වියදම / மூலதனச் செலவு<br>Capital Expenditure<br>විස්තරය<br>விவரணம்<br>Discription | 2015<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2016<br>අනුමත ඇස්තමේන්තුව<br>அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு<br>Approved Estimate<br>Rs. | 2016<br>සංශෝධිත ඇස්තමේන්තුව<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Revised Estimate<br>Rs. | 2016<br>සත්‍ය වියදම<br>உள்ளபடி செலவு<br>Actual Expenditure<br>Rs. | 2016<br>ඉතිරිය<br>சேமிப்புக்கள்<br>Savings<br>Rs. |
|---|---|---|---|---|---|---|
| | <u>මූලධන වත්කම් පුනරුත්ථාපනය සහ වැඩි දියුණු කිරීම</u><br><u>மூலதன இருப்புச் சொத்துக்களின் முன்னேற்றம்</u><br>**<u>Rehabilitation & Improvement of Capital Assets</u>** | | | | | |
| 2001 | ගොඩනැගිලි හා ඉදිකිරීම්<br>கட்டிடங்களும் அமைப்புக்களும்<br>Bulding & Structure | 254,416 | - | - | - | - |
| 2002 | යන්ත්‍ර හා යන්ත්‍රෝපකරණ<br>இயந்திரவகையும் உபகரணமும்<br>Plant Machinary & Equipment | - | 200,000 | 200,000 | 32,589 | 167,411<br>- |
| 2003 | වාහන<br>வாகனங்கள்<br>Vehicles | 634,244 | 200,000 | 200,000 | 127,300 | 72,700<br>- |
| | <u>මූලධන වත්කම් අත්පත් කර ගැනීම</u><br><u>மூலதன இருப்புச் சொத்துக்கள் கைப்பற்றல்</u><br>**<u>Acquisition of Capital Assets</u>** | | | | | |
| 2101 | වාහන | - | - | - | - | - |
| 2102 | ගෘහ භාණ්ඩ හා කාර්යාලීයය උපකරණ<br>தளபாட காரியாலய உபகரணமும்<br>Furniture & Office Euipment | 214,585 | - | 1,000,000 | 868,190 | 131,810<br>- |
| 2103 | යන්ත්‍ර හා යන්ත්‍රෝපකරණ | 328,300 | 500,000 | 500,000 | 14,500 | 485,500 |
| | හැකියා වර්ධනය | | | | | |
| 2401 | කාර්ය මණ්ඩල පුහුණු කිරීම්<br>பயிற்சியும் ஆளுமை விருத்தியும்<br>Training & Capacity Building | 939,868 | 800,000 | 1,358,000 | 1,192,130 | 165,870<br>- |
| | උප එකතුව | 2,371,413 | 1,700,000 | 3,258,000 | 2,234,709 | 1,023,291 |

ශීර්ෂ අංකය/ தலைப்பு இல /Head No :280

වැඩ සටහන් අංකය/ நிகழ்ச்சித் திட்டம் /Programme No: 02

මූලධන වියදම්/ மூலதனச் செலவு / Capital Expenditure

| මූලධන වියදම மூலதனச் செலவு Capital Expenditure | | 2015 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2016 අනුමත ඇස්තමේන්තුව அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு Approved Estimate Rs. | 2016 සංශෝධිත ඇස්තමේන්තුව மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு Revised Estimate Rs. | 2016 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2016 ඉතිරිය சேமிப்புக்கள் Savings Rs. |
|---|---|---|---|---|---|---|
| වැය විෂය අංකය விடய குறியீடு Object Code | විස්තරය விவரணம் Discription | | | | | |
| | ව්‍යාපෘති ඇගැයීම හා වෙබ් අඩවි පාදක කරගත් අධීක්ෂණ පද්ධතිය | | | | | |
| 2502(11) | ආයෝජන | 2,768,239 | 3,000,000 | 3,000,000 | 2,876,967 | 123,033 |
| | <u>ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුවේ හැකියා ශක්තිමත් කිරීම</u> <u>திட்ட அமுலாக்கலின் ஆற்றலை வலுவடையசெய்தல்</u> **<u>Strengthening the plan Implementation Capacity</u>** | | | | | |
| 2502(13) | ආයෝජන | 320,315 | - | - | - | - |
| | නැගී එන පළාත් ඉලක්ක කරගනිමින් මූලික සමාජ සේවාවන් වැඩිදියුණු කිරීමේ ව්‍යාපෘතිය | | | | | |
| 2502(17) | ආයෝජන | 7,691,110 | 7,630,000 | 7,737,000 | 7,735,049 | 1,951 |
| | | - | | - | - | - |
| | එකතුව / மொத்தம் **Total** | **13,151,077** | **12,330,000** | **13,995,000** | **12,846,725** | **1,148,275** |

මූල්‍ය ප්‍රභවයන්

**நிதி மூலங்கள்**

**Financial Sources**

| වැඩ සටහන நிகழ்ச்சித் திட்டம் Programme | විස්තරය விவரணம் Discription | | | 2015 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2016 අනුමත ඇස්තමේන්තුව அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு Approved Estimate Rs. | 2016 සංශෝධිත ඇස්තමේන්තුව மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு Revised Estimate Rs. | 2016 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2016 ඉතිරිය சேமிப்புக்கள் Savings Rs. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | ඒකාබද්ධ අරමුදල | திட்ட நிதியம் | Consolidated Fund | 83,767,295 | 97,304,000 | 97,446,600 | 92,954,828 | 4,491,772 |
| | විශේෂ නීති සේවා | வசேட சட்டம் | Special Law | - | - | - | - | - |
| | *විදේශාධාර* | *வெளிநாட்டு உதவி* | ***Foreign Aid*** | | | | | |
| | ණය | கடன்கள் | Loans | | | | | |
| | ප්‍රධාන | கொடைகள் | Grants | 320,315 | - | - | - | - |
| | *ප්‍රතිපූර්ණය කළ හැකි විදේශාධාර* | *மீள்ளிக்கப்படக்கூடிய வெளிநாட்டு உதவி* | ***Reimbursable Foreign Aid*** | | | | | |
| | ණය | கடன்கள் | Loans | - | - | - | - | - |
| | ආධාර | கொடைகள் | Grants | - | - | - | - | - |
| | විදේශාධාර සම්බන්ධිත දේශීය අරමුදල් අරමුදල් | நிதியம் | Funds | 7,691,110 | 7,630,000 | 7,737,000 | 7,735,048 | 1,952 |
| | විදේශාධාර | *வெளிநாட்டு உதவி* | Foreign Aid | - | - | - | - | - |
| | මුළු වියදම | மொத்த செலவுகள் | **Total Expenditure** | **91,778,720** | **104,934,000** | **105,183,600** | **100,689,876** | **4,493,724** |

ශීර්ෂ අංකය/ தலைப்பு இல / **Head No :280**

අමාත්‍යාංශය/දෙපාර්තමේන්තුව- ව්‍යාපෘති කළමනාකරණ හා අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
**அமைச்சு/திணைக்களம்: கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்**
**Ministry/Department : Department of Project Management & Monitoring**

රජයේ නිලධාරීන්ගේ අත්තිකාරම් බී ගිණුම : විෂය අංකය **28001**
**அரச ஊழியர்களுக்கான முற்பண ஆ(B) கணக்கு : விடய இல : 28001**
**Public Officers Advance Accounts :Subject No 28001**

| වර්ෂය / ஆண்டு / Year — විස්තරය / **விவரணம்** / Discription | 2015 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2016 අනුමත ඇස්තමේන්තුව அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு Approved Estimate Rs. | 2016 සංශෝධිත ඇස්තමේන්තුව மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு Revised Estimate Rs. | 2016 සත්‍ය වියදම உள்ளபடி செலவு Actual Expenditure Rs. | 2016 සීමා ඉක්මවීම எல்லை மீறிய வரையறை Limits Exceeds Rs. |
|---|---|---|---|---|---|
| ආරම්භක ශේෂය ஆரம்ப மீதி Openning Balance | 11,376,731.72 | | | 13,067,746.06 | |
| වර්ෂයේ හර ஆண்டு கால வரவு Debit in during the year | 7,005,737.54 | 3,000,000.00 | | 4,930,267.00 | |
| එකතුව/ மொத்தம் /Total | 18,382,469.26 | 3,000,000.00 | | 17,998,013.06 | |
| අඩු කළා/ கழி /Less | | | | | |
| වර්ෂයේ මුළු බැර ஆண்டு கால செலவு Credit in during the year | 5,314,723.20 | 2,500,000.00 | | 6,072,644.10 | |
| වර්ෂය අවසානයේ හර ஆண்டு முடிவில் மீதி வரவு End of the year Debit Balance | 13,067,746.06 | 18,000,000.00 | | 11,925,368.96 | |

| **සටහන/ குறிப்பு /Note** | **හර/ வரவு/Debit** | **බැර/ செலவு/Credit** |
|---|---|---|
| වර්ෂයේ සීමාවට බලපාන හර සහ බැර (ශීර්ෂ අංක 280011) | 2,935,497.00 | 3,165,427.85 |
| වර්ෂයේ සීමාවට බල නොපාන හර සහ බැර (ශීර්ෂ අංක 280012) | 1,994,770.00 | 2,907,216.25 |
| එකතුව | 4,930,267.00 | 6,072,644.10 |
| வருடாந்த வரையறைகள் மீது விளைவுளை ஏற்படுத்தும் வரவு செலவுகள் ( விடய இல. 280011 ) | 2,935,497.00 | 3,165,427.85 |
| வருடாந்த வரையறைகள் மீது விளைவுகள் ஏற்படுத்தாத வரவு செலவுகள் ( விடய இல. 280012 ) | | |
| மொத்தம் | 1,994,770.00 | 2,907,216.25 |
| மொத்தம் | 4,930,267.00 | 6,072,644.10 |
| Debit & Credit which affect on Annual limit (Subjects No 280011) | | |
| Debit & Credit which does not affect on Annual limit (Subjects No 280012) | 2,935,497.00 | 3,165,427.85 |
| Total | 1,994,770.00 | 2,907,216.25 |
| | 4,930,267.00 | 6,072,644.10 |

# இணைப்பு III

## நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரிப்பதில் வசதிப்படுத்தல் சேவைகளின் முன்னேற்றம்

| சேவைகள் | நிகழ்ச்சித்திட்டங்கள் | அரச உடமைக் கம்பனிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பயிற்சி | 19 | 244 |
| ஆலோசனை கிளினிக் | 140 | 145 |
| இணையத்தள உதவிகள் | 17 | 17 |
| குழு பயிற்சி பட்டறைகள் | 10 | 108 |

## நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்தல் மற்றும் முன்னேற்றத்தை சமர்ப்பித்தல் செயற்பாடு

| | 2ம் காலாண்டு | 3ம் காலாண்டு | 4ம் காலாண்டு |
|---|---|---|---|
| நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்து முடித்துள்ள அரச உடமைக்கம்பனிகள் | 75 | 94 | 213 |
| முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்த அரச உடமைக் கம்பனிகள் | 52 | 86 | 157 |
| முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்காத அரச உடமைக் கம்பனிகள் | 23 | 08 | 56 |
| | | | |
| அரச உடமைக் கம்பனிகள் தற்போதும் நிறுவன பெறுபேற்று சட்டகத்தை தயாரித்து முடிப்பதற்கான நிலையிலுள்ளவை | **147** | **131** | **55** |

# இணைப்பு IV

## கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2016

## துறைகள் ரீதியாக வகைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை 2016.12.31

| இல. | மாவட்டம் | தகுதியான கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | கருத்திட்டங்கள் | | | | | | | | | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூபா.மி) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அனுமதி வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | வகைப்படுத்தப்பட்ட துறைகள் ரீதியான மொத்தம் | | | | | | | |
| | | | நிர்மாணம் | பொருட்கள் / சேவைகள் கொள்வனவு | மொத்தம் | சிறிய நீர்ப்பாசனம் | சமூகம் சார்ந்த நீர் விநியோகம் | சிறிய அளவிலான மின் விநியோகம் | கிராமிய அனுகல் | வேறு உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் | நேரடி மானியம் | | |
| 1 | அம்பாறை | 405 | 457 | 7 | 464 | 5 | 16 | - | 424 | 12 | 7 | 405.00 | 283,087 |
| 2 | அனுராதபுரம் | 672 | 1,004 | 143 | 1,147 | 102 | 118 | - | 771 | 15 | 141 | 672.00 | 322,347 |
| 3 | பதுளை | 540 | 1,017 | 24 | 1,041 | 37 | 96 | - | 884 | - | 24 | 527.74 | 131,142 |
| 4 | மட்டக்களப்பு | 297 | 306 | 14 | 320 | - | 2 | - | 298 | 20 | - | 297.00 | 337,692 |
| 5 | கொழும்பு | 355 | 664 | - | 664 | 24 | 12 | 1 | 569 | 58 | - | 343.92 | 252,462 |
| 6 | காலி | 853 | 1,661 | - | 1,661 | 36 | 24 | - | 1,562 | 39 | - | 817.23 | 285,049 |
| 7 | கம்பஹா | 1,105 | 2,331 | 165 | 2,496 | 46 | 22 | 3 | 2,178 | 82 | 165 | 1,087.69 | 577,739 |
| 8 | அம்பாந்தோட்டை | 569 | 801 | 2 | 803 | 47 | 28 | - | 646 | 80 | 2 | 588.54 | 253,308 |
| 9 | யாழ்ப்பாணம் | 391 | 612 | 23 | 635 | 28 | 23 | 3 | 353 | 228 | - | 391.00 | 386,982 |
| 10 | களுத்துறை | 762 | 1,616 | - | 1,616 | 38 | 80 | 2 | 1,358 | 138 | - | 758.75 | 420,853 |
| 11 | கண்டி | 1,147 | 2,687 | 2,175 | 4,862 | 44 | 44 | - | 2,526 | 73 | 2,175 | 1,131.96 | 259,774 |
| 12 | கேகாலை | 573 | 2,228 | 29 | 2,257 | 40 | 98 | 1 | 2,080 | 9 | 29 | 563.76 | 93,957 |
| 13 | கிளிநொச்சி | 95 | 109 | 1 | 110 | 11 | 1 | - | 42 | 55 | 1 | 95.00 | 52,153 |
| 14 | குருநாகல் | 1,598 | 3,046 | 179 | 3,225 | 236 | 92 | 3 | 2,701 | 14 | 179 | 1,596.40 | 1,147,379 |
| 15 | மன்னார் | 153 | 230 | - | 230 | 27 | 10 | 1 | 121 | 71 | - | 153.00 | 179,553 |
| 16 | மாத்தளை | 512 | 1,082 | - | 1,082 | 51 | 75 | - | 885 | 71 | - | 500.64 | 208,791 |
| 17 | மாத்தறை | 613 | 1,189 | 2 | 1,191 | 69 | 53 | 1 | 1,000 | 68 | - | 590.94 | 268,417 |
| 18 | மொனராகலை | 319 | 589 | 2 | 591 | 7 | 24 | - | 549 | 11 | - | 314.18 | 121,313 |
| 19 | முல்லைத்தீவு | 136 | 163 | - | 163 | 11 | - | 1 | 96 | 55 | - | 134.53 | 3,202,427 |
| 20 | நுவரெலியா | 478 | 717 | 1 | 718 | 6 | 57 | 1 | 634 | 20 | - | 499.05 | 276,072 |
| 21 | பொலன்நறுவை | 295 | 466 | - | 466 | 10 | 25 | 5 | 271 | 155 | - | 277.39 | 252,037 |
| 22 | புத்தளம் | 548 | 1,015 | 34 | 1,049 | 30 | 48 | 10 | 849 | 112 | - | 538.79 | 313,956 |
| 23 | இரத்தினபுரி | 557 | 1,392 | 3 | 1,395 | 18 | 82 | - | 1,288 | 4 | 3 | 576.70 | 320,834 |
| 24 | திருகோணமலை | 230 | 335 | - | 335 | 12 | 8 | 1 | 287 | 27 | - | 230.00 | 397,638 |
| 25 | வவுனியா | 102 | 128 | - | 128 | 6 | 7 | - | 95 | 20 | - | 102.00 | 99,244 |
| மொத்தம் | | 13,305 | 25,845 | 2,804 | 28,649 | 941 | 1,045 | 33 | 22,467 | 1,437 | 2,726 | 13,193.21 | 10,444,205 |

* கருத்திட்டங்கள் பின்வரும் துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சி.நீ - சிறிய நீர்ப்பாசனம் [கால்வாய்கள், குளங்கள், விவசாய கிணறுகள் நிர்மாணம்/புனர் நிர்மாணம்]

ச.சா.நீ.வி - சமூகம் சார்ந்த நீர் விநியோகம் [சமூகம் சார்ந்த நீர் விநியோகம் - புனர் நிர்மாணம்/நிர்மாணம் - குடி நீர் மற்றும் குளிப்பதற்கான வசதிகளை மேம்படுத்தல் ]

சி.அ.மி.வி - சிறிய அளவிலான மின் விநியோகம் [சிறிய அளவிலான மின் விநியோக கருத்திட்டங்கள்]

கி.அ - கிராமிய அனுகல் [கிராமிய பாதைகள், நடைபாதைகள், கிராமிய பாதைகள், மதகுகள் மற்றும் சிறு பாலங்கள் (புனர் நிர்மாணம்/புதிய நிர்மாணம்)]

வே.க.க - வேறு உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் [கிராம மட்டத்தில் அமுல்படுத்தக்கூடிய கிராமிய சமூகங்களின் வாழ்வினை மேம்படுத்தும் வேறு பௌதிக உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள்]

நே.மா - நேரடி மானியம்

# இணைப்பு V

# பன்முகப்படுத்தப்பட்ட மூலதன பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம் - 2016
# துறைகள் ரீதியாக வகைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை 2016.12.31

| இல. | மாவட்டம் | கருத்திட்டங்கள் | | | | | | | | | | | | | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூபா.மி) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதி வழங்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | வகைப்படுத்தப்பட்ட துறைகள் ரீதியான மொத்தம் | | | | | | | | | | | |
| | | நிர்மாணம் | பொருட்கள் / சேவைகள் கொள்வனவு | மொத்தம் | கிராமிய நீர் வழங்கல் | கிராமிய மின் விநியோகம் | கிராமிய வீதிகள் | சமூக அபிவிருத்தி | சிறிய நீர்ப்பாசனம் | சமூக நலன்புரி | சமூக சேவைகள் | சமூக பாதுகாப்பு | கிராமிய பொருளாதாரம் | வேறு | | |
| 1 | அம்பாறை | 385 | 451 | 836 | 9 | 28 | 55 | 98 | 15 | 286 | 85 | 5 | 15 | 240 | 101.61 | 490,777 |
| 2 | அனுராதபுரம் | 503 | 721 | 1,224 | 21 | 8 | 190 | 201 | 16 | 720 | - | - | 6 | 62 | 141.35 | 320,169 |
| 3 | பதுளை | 486 | 435 | 921 | 53 | - | 309 | 167 | 14 | 1 | 124 | - | - | 253 | 120.15 | 195,680 |
| 4 | மட்டக்களப்பு | 279 | 370 | 649 | 3 | 1 | 44 | 19 | 3 | 520 | 12 | - | - | 47 | 89.96 | 686,687 |
| 5 | கொழும்பு | 749 | 1,012 | 1,761 | 10 | 19 | 403 | 488 | 2 | 759 | 5 | - | 5 | 70 | 355.22 | 932,726 |
| 6 | காலி | 483 | 810 | 1,293 | 2 | 5 | 272 | 120 | 4 | 677 | 146 | 1 | 7 | 59 | 151.97 | 297,449 |
| 7 | கம்பஹா | 750 | 312 | 1,062 | 10 | 7 | 427 | 286 | 46 | 239 | 10 | - | 33 | 4 | 299.50 | 505,237 |
| 8 | அம்பாந்தோட்டை | 386 | 484 | 870 | 31 | 57 | 98 | 182 | 18 | 473 | - | - | - | 11 | 105.39 | 218,519 |
| 9 | யாழ்ப்பாணம் | 450 | 506 | 956 | 3 | 45 | 7 | 547 | - | 180 | 14 | - | 13 | 147 | 101.29 | 578,135 |
| 10 | களுத்துறை | 497 | 358 | 855 | 35 | 15 | 283 | 142 | 3 | 143 | 44 | - | 122 | 68 | 187.78 | 723,200 |
| 11 | கண்டி | 985 | 938 | 1,923 | 61 | 14 | 522 | - | 8 | 159 | 631 | 1 | 3 | 524 | 215.83 | 218,643 |
| 12 | கேகாலை | 640 | 445 | 1,085 | 20 | 11 | 435 | 167 | 7 | 445 | - | - | - | - | 139.41 | 116,992 |
| 13 | கிளிநொச்சி | 87 | 117 | 204 | 6 | 17 | 9 | 110 | - | 54 | 6 | 2 | - | - | 20.73 | 106,656 |
| 14 | குருநாகல் | 992 | 1,405 | 2,397 | 19 | 39 | 305 | 392 | 33 | 1,457 | 8 | - | 24 | 120 | 235.38 | 705,975 |
| 15 | மன்னார் | 168 | 158 | 326 | 3 | 9 | 8 | 31 | - | 172 | - | - | - | 103 | 37.88 | 134,039 |
| 16 | மாத்தளை | 276 | 73 | 349 | 21 | 1 | 171 | 33 | 4 | 100 | - | - | 2 | 17 | 75.24 | 121,529 |
| 17 | மாத்தறை | 495 | 711 | 1,206 | 30 | 8 | 316 | 100 | 22 | 602 | - | - | - | 128 | 140.20 | 248,411 |
| 18 | மொனராகலை | 275 | 370 | 645 | 19 | 4 | 136 | 57 | 5 | 300 | 101 | 1 | 7 | 15 | 71.54 | 189,112 |
| 19 | முல்லைத்தீவு | 119 | 158 | 277 | 3 | 2 | 15 | 59 | - | 143 | 1 | - | 2 | 52 | 38.73 | 72,835 |
| 20 | நுவரெலியா | 435 | 243 | 678 | 61 | 6 | 241 | 118 | 5 | 243 | - | - | - | 4 | 125.98 | 270,180 |
| 21 | பொலன்நறுவை | 351 | 390 | 741 | 16 | 12 | 64 | 58 | 4 | 423 | 53 | - | 14 | 97 | 59.14 | 1,226,152 |
| 22 | புத்தளம் | 533 | 558 | 1,091 | 27 | 24 | 192 | 190 | 11 | 446 | 91 | 1 | 17 | 92 | 174.53 | 387,396 |
| 23 | இரத்தினபுரி | 606 | 733 | 1,339 | 28 | 1 | 308 | 303 | 4 | 683 | 1 | - | - | 11 | 179.71 | 317,532 |
| 24 | திருகோணமலை | 312 | 231 | 543 | 14 | 3 | 39 | 301 | 3 | 64 | - | - | - | 119 | 82.27 | 243,690 |
| 25 | வவுனியா | 150 | 166 | 316 | 11 | 11 | 21 | 75 | 1 | 194 | 1 | - | - | 2 | 39.98 | 122,613 |
| மொத்தம் | | 11,392 | 12,155 | 23,547 | 516 | 347 | 4,870 | 4,244 | 228 | 9,483 | 1,333 | 11 | 270 | 2,245 | 3,290.75 | 9,430,334 |